**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா.43** **Date : 19.05.2025.**

| | |
|---|---|
| **Name : ராமசுந்தரம்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 2, 8, 11, 18, 19, 20, 29, 30, 34, 36, 39, 40, 41, 42, 43 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கடந்த 2016 ம் ஆண்டு ஜீன் மாதம் 30 ம் தேதி காவல் துறையிலிருந்து பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2007 ம் ஆண்டு நான் தலைமை காவலராக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது 11.06.2007 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் மேட்டூர் டு மேச்சேரி மெயின் ரோடு ராமன் நகர் பஸ் ஸ்டாப் அருகில் இந்தியன் ஓவர் சீஸ் பேங்க் முன்பு பொது மக்கள் சாலை மறியல் செய்வதாக தகவல் தெரிவித்து காவல் ஆய்வாளர் அவர்கள் பாதுகாப்பு பணிக்கு அங்கு அனுப்பி வைத்தார்.

2) அப்போது அங்கு சாலையில் இறந்து போன மாணவன் மகேந்திரன் என்பவரது பிரேதத்தை ரோட்டில் வைத்து ஆம்புலன்ஸை ரோட்டில் குறுக்காக நிறுத்தி சாலை மறியல் செய்து கொண்டிருந்தனர். சுமார் 300 நபர்கள் இருந்திருப்பார்கள். இந்த தகவல் தெரிந்து காவல் ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் துறையை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆய்வாளர், துணை தாசில்தார், தாசில்தார் மற்றும் ஆர்.டி.ஓ ஆகிய அதிகாரிகள் அங்கு வந்து சாலை மறியல் செய்யக்கூடிய பொது மக்களிடம் சமாதானம் செய்தனர். சமாதானம் பேசும் போது காரசாரமாக வாகனங்களை கையாலும், கல்லாலும்

அடித்து வாகனங்களுக்கு சேதம் உண்டாக்கினார்கள். பாதிக்கப்பட்டவர் சார்பாக சாலை மறியல் நடத்துபவர்கள் மாணவன் இறந்ததற்காக 10 லட்சம் ரூபாய் பணமும் அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வேண்டுமென்றும், C.E.O அவர்கள் பள்ளி ஆசிரியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கோரிகை வைத்தார்கள்.

3) பேச்சு வார்த்தைக்கு உடன் படாததால் சாலை மறியல் செய்தவர்கள் கலையச்சொல்லியும் கலையாததால் வருவாய் துறை அதிகாரி அவர்கள் குறைந்த பட்ச பலத்தை உபயோகித்து கூட்டத்தை கலைக்க உத்தரவிட்டார். அதன் பேரில் போலீசார் கூட்டத்தை கலைத்தனர். இது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை 12.06.2007 ம் தேதி விசாரித்தார். நடந்ததை சொன்னேன். ஆஜர் எதிரிகள் தான் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். இன்னும் சில நபர்கள் வரவில்லை. அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர்களுடைய வருகையின்மை குறித்து ஆட்சேபிக்க மாட்டேன் என்று எதிரி தரப்பில் மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4) முதல் விசாரணையில் சொன்னவாறு காவல் துறை கூட்டதை கலைத்து விட்டார்கள் என்றால் சரிதான். கூட்டத்தை கலைத்ததால் அசம்பாவிதம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சாலை மறியல் மற்றும் அசம்பாவிதம் நடந்தது. தகவல் கிடைத்து தான் காவல் ஆய்வாளர் சம்பவயிடம் சென்றார் என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் மகேந்திரன் என்பவருடைய சடலக்கூறாய்வு நடக்கும் இடத்தில் இருந்தார். அவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு அனைவருக்கும் மைக் மூலமாக தகவல் கொடுத்து சம்பவயிடத்திற்கு வந்தார்.

5) ஆய்வாளர் சொன்ன பிறகு தான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் பள்ளி மாணவன் இறந்த பிறகு அந்த பள்ளி வளாகத்தில் இருந்தேன், அதன் பிறகு தகவல் கிடைத்து தான் சம்பவயிடம் சென்றேன் என்றால் ஆமாம்.

சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்னர் சம்பவயிடத்தில் என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவ்வாறு இல்லை, ஆய்வாளர் சொல்லி தகவல் தெரியும். சாலை மறியல் நான் சம்பவயிடம் செல்வதற்கு முன்னர் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ஆய்வாளர் சொன்னார்.

6) நான் செல்லும் போது சாலை மறியல் முடிந்ததா என்றால் இரவு 12 மணி வரை நடந்தது நான் அங்கு தான் இருந்தேன். பள்ளியிலிருந்து சாலை மறியல் நடந்த இடம் எவ்வளவு தூரம் என்றால் ஒரு பர்லாங் இருக்கும். இடையில் ரயில்வே கிராசிங் உள்ளதால் சுற்றி தான் வரமுடியும் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரமா என்றால் ஆமாம் ஆனால் மின்விளக்கு வெளிச்சம் இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு நான் எந்த திசையில் இருந்தேன் என்றால் கிழக்கு திசையில் இருந்தேன்.

7) என்னுடன் பாதுகாப்பு பணியில் வேறு யார் இருந்தனர் என்றால் நிறைய நபர்கள் இருந்தனர் நீண்ட நாட்கள் ஆனதால் யார் யார் என்னுடன் பாதுகாப்பு பணியில் இருந்தனர் என்று தற்போது நினைவில்லை. 300 நபர்களில் யார் யார் என்ன செய்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் 12 மணி வரை நடந்தது அதனால் குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. சம்பவயிடத்தில் எத்தனை கடைகள், என்னென்ன கடைகள் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் 20 கடைகள் இருந்தது. அந்த கடைகளின் பெயர்களை என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது.

8) கூட்டத்தை கலைக்க போலீசார் தண்ணீர் பீய்த்து போலீஸ்தடி அடி நடத்தினார்கள் என்றால் ஆமாம். பொது மக்களுக்கு சேதாரமும், அடி பட்டதால் தான் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க காவல் துறையினரால் எதிரிகள் மீது இப்படி ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது ஆஜர் எதிரிகள் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9) சம்பவம் நடந்த சாலை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்கிறது. வராத எதிரிகளின் பெயரை சொல்ல முடியுமா என்றால் பார்த்தால் அடையாளம் சொல்வேன். பெயர் எனக்கு நினைவில்லை. யார் யார் எந்த திசையிலிருந்து, எந்த பகுதியிலிருந்து வந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. பொது மக்கள் மீது காவல் துறை தடி அடி நடத்தியதால் தனிப்புகார் கொடுத்து நீதிமன்றத்தில் எதிரிகள் புகார் கொடுப்பார்கள் என்றும் அதிலிருந்து தப்பிக்க காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

10) ஆய்வாளர் தான் விசாரித்து எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்தார் ஆனால் எனக்கு எவ்வாறு சேர்க்கப்பட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் யாரையாவது அடையாளம் காட்டி சேர்க்கப்பட்டார்களா என்றால் இல்லை. நரசிம்மன் என்னுடன் தான் இருந்தார் என்றால் ஆமாம். சம்பவத்தை புகைப்படம் எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ஆய்வாளர் எதிரிகளை எவ்வாறு சேர்த்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் தலைமையில் தடிஅடி நடந்த போது அதை மறைக்க எதிரிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சேர்க்கப்பட்டவர்கள் வேடிக்கை பார்த்த அப்பாவி மக்கள் கூட சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை.

11) சம்பவம் யார் தலைமையில் நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெற்றிவேல் தலைமையில் நடந்தது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 23/2020**

**Prosecution witness : அ.சா.45** **Date : 19.05.2025.**

| **Name : நரசிம்மன்** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 2, 8, 11, 18, 19, 20, 29, 30, 34, 36, 39, 40, 41, 42, 43 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கடந்த 28.02.2015ம் ம் தேதியன்று காவல் துறையிலிருந்து பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2007ம் ஆண்டு நான் தலைமை காவலராக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது கடந்த 2007ம் ஆண்டு நான் தலைமை காவலராக கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது 11.06.2007 ம் தேதி இரவு சுமார் 07.00 மணியளவில் மேட்டூர் டூ மேச்சேரி மெயின் ரோடு ராமன் நகர் பஸ் ஸ்டாப் அருகில் இந்தியன் ஓவர் சீஸ் பேங்க் முன்பு பொது மக்கள் சாலை மறியல் செய்வதாக தகவல் தெரிவித்து காவல் ஆய்வாளர் அவர்கள் பாதுகாப்பு பணிக்கு அங்கு அனுப்பி வைத்தார்.

2) அப்போது அங்கு சாலையில் இறந்து போன மாணவன் மகேந்திரன் என்பவரது பிரேதத்தை ரோட்டில் வைத்து ஆம்புலன்ஸை ரோட்டில் குறுக்காக நிறுத்தி சாலை மறியல் செய்து கொண்டிருந்தனர். சுமார் 300 நபர்கள் இருந்திருப்பார்கள். இந்த தகவல் தெரிந்து காவல் ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர் மற்றும் வருவாய் துறையை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆய்வாளர்,

துணை தாசில்தார், தாசில்தார் மற்றும் ஆர்.டி.ஓ ஆகிய அதிகாரிகள் அங்கு வந்து சாலை மறியல் செய்யக்கூடிய பொது மக்களிடம் சமாதானம் செய்தனர். சமாதானம் பேசும் போது காரசாரமாக வாகனங்களை கையாலும், கல்லாலும் அடித்து வாகனங்களுக்கு சேதம் உண்டாக்கினார்கள். பாதிக்கப்பட்டவர் சார்பாக சாலை மறியல் நடத்துபவர்கள் மாணவன் இறந்ததற்காக 10 லட்சம் ரூபாய் பணமும் அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வேண்டுமென்றும், C.E.O அவர்கள் பள்ளி ஆசிரியர்களை பணி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் கோரிகை வைத்தார்கள்.

3) பேச்சு வார்த்தைக்கு உடன் படாததால் சாலை மறியல் செய்தவர்கள் கலையச்சொல்லியும் கலையாததால் வருவாய் துறை அதிகாரி அவர்கள் குறைந்த பட்ச பலத்தை உபயோகித்து கூட்டத்தை கலைக்க உத்தரவிட்டார். அதன் பேரில் போலீசார் கூட்டத்தை கலைத்தனர். இது சம்மந்தமாக கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை 12.06.2007 ம் தேதி விசாரித்தார். நடந்ததை சொன்னேன். ஆஜர் எதிரிகள் தான் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். இன்னும் சில நபர்கள் வரவில்லை. அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அவர்களுடைய வருகையின்மை குறித்து ஆட்சேபிக்க மாட்டேன் என்று எதிரி தரப்பில் மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. வெற்றிவேல் என்பவரை மட்டும் பார்த்தால் அடையாளம் தெரியும்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) கூட்டத்தை கலைத்ததால் அசம்பாவிதம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சாலை மறியல் மற்றும் அசம்பாவிதம் நடந்தது. சம்பவம் நடைபெறுவதற்கு 7 மணிக்கு முன்பாக என்ன நடந்தது என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். ஆனால் 07.30 மணிக்கு நான் சென்றுவிட்டேன்.

5) ஆய்வாளர் சொன்ன பிறகு தான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் காவல் நிலைய வளாகத்தில் இருந்தேன், அதன் பிறகு தகவல் கிடைத்து தான்

சம்பவயிடம் சென்றேன் என்றால் ஆமாம். சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்னர் சம்பவயிடத்தில் என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அவ்வாறு இல்லை, ஆய்வாளர் சொல்லி தகவல் தெரியும். சாலை மறியல் நான் சம்பவயிடம் செல்வதற்கு முன்னர் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ஆய்வாளர் சொன்னார்.

6) நான் செல்லும் போது சாலை மறியல் முடிந்ததா என்றால் இரவு 12 மணி வரை நடந்தது நான் அங்கு தான் இருந்தேன். சம்பவம் நடந்த இடம் இருட்டான இடமா என்றால் ஆமாம். மின்விளக்கு எறிந்து கொண்டிருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு நான் எந்த திசையில் இருந்தேன் என்றால் கிழக்கு திசையில் இருந்தேன்.

7) சம்பவ சமயத்தில் யார் யார் என்ன செய்தனர் என்று எனக்கு தெரியாது என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. கூட்டத்தை கலைக்க போலீசார் தண்ணீர் பீய்த்து போலீஸ்தடி அடி நடத்தினார்கள் என்றால் தடி அடி மட்டுமே நடத்தினார்கள். பொது மக்களுக்கு சேதாரமும், அடி பட்டதால் தான் அந்த வழக்கிலிருந்து தப்பிக்க காவல் துறையினரால் எதிரிகள் மீது இப்படி ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது ஒருவர் பெயர் மட்டும் தான் நினைவில் உள்ளது. அது வெற்றிவேல் ஆகும்.

8) யார் யார் எந்த திசையிலிருந்து, எந்த பகுதியிலிருந்து வந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. பொது மக்கள் மீது காவல் துறை தடி அடி நடத்தியதால் தனிப்புகார் கொடுத்து நீதிமன்றத்தில் எதிரிகள் புகார் கொடுப்பார்கள் என்றும் அதிலிருந்து தப்பிக்க காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

9) ஆய்வாளர் தான் விசாரித்து எதிரிகளை இந்த வழக்கில் சேர்த்தார் ஆனால் எனக்கு எவ்வாறு சேர்க்கப்பட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான்

யாரையாவது அடையாளம் காட்டி சேர்க்கப்பட்டார்களா என்றால் இல்லை. நரசிம்மன் என்னுடன் தான் இருந்தார் என்றால் ஆமாம். சம்பவத்தை புகைப்படம் எடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ஆய்வாளர் எதிரிகளை எவ்வாறு சேர்த்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் தலைமையில் தடிஅடி நடந்த போது அதை மறைக்க எதிரிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சேர்க்கப்பட்டவர்கள் வேடிக்கை பார்த்த அப்பாவி மக்கள் கூட சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. சாட்சி மீண்டும் வாய்ப்பில்லை என்று சொன்னார். ஆய்வாளர் நிலையத்திலிருந்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்தார் என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.